# LITERARY FINDINGS

INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH

ISSN 2278-2311


## பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது

சேலம்.

9

தமிழ்த்துறை

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம் அக்டோபர்-04-2019

# இலக்கண இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்



**OCTOBER - 2019**


visit us : www.kongunadupublications.com

kongunadupublications@gmail.com

16. சங்க இலக்கியத்தில் ஏறுதழுவுதல்

*முனைவர் மு.ஹரிகிருஷ்ணன் - 39

17. மு.ராமசாமி நாடகங்களில் பெண்கள்

*திருமதி இர.அருள்அரசி - 43

18. குறிஞ்சிக்கலியில் புறம் பேசுதல்

*சோ.பாக்கியராஜ் - 46

19. மீள்வாசிப்பில் பள்ளு இலக்கியம்

*முனைவர் நா.ரேணுகா - 48

20. சங்க இலக்கியத்தில் வாழ்வியல்

*முனைவர் இரா.டயானா கிறிஸ்டி - 51

21. இலக்கியங்கள் இயம்பும் வாழ்வியல் வழித்தடங்கள்

*இரா.ஏஞ்சல் - 55

22. இரா.நடராசன் சிறுகதைகளில் ஒடுக்கப்பட்டோர் நிலை

*தா.சித்ராதேவி - 58

23. நாடகம் நவிலும் நல்லறம்

*க.ரேவதி - 61

24. இலக்கியங்களில் பரதவர் வாழ்வு

*திருமதி ரம்யா - 63

25. தூது செல்வதில் பாணர்களின் பங்களிப்பு

*முனைவர் இரா.பொன்னி - 67

26. முத்தொள்ளாயிரப் பாடல்களில் வாழ்வியல்

*முனைவர் ஆ.மெர்சி ஆஞ்சலா - 70

27. குலசேகராழ்வார் பாடல்களில் மெய்யியல் சிந்தனைகள்

*ப.கௌரி - 73

28. நற்றிணையில் உளவியல்

*அ.சசிகலாதேவி - 75

29. நம்பியகப்பொருள் உணர்த்தும் வாழ்வியல்

*முனைவர் கி.சுதா - 77

30. அறிவுமதியின் கவிதையில் மொழிப்பற்று

*ச.சந்தியா - 81

# முத்தொள்ளாயிரப் பாடல்களில் வாழ்வியல்

*முனைவர் ஆ.மெர்சி ஆஞ்சலா, உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை -18.

**முன்னுரை**

மனிதனின் சிந்தனைகள், அனுபவங்கள் கற்பனைகளின் வெளிப்பாடே இலக்கியங்கள் ஆகும். தொடக்க காலத்தில் நாகரிகமற்று வாழ்ந்த மனிதர் படிப்படியாக நற்பண்புகளை மேற்கொண்டு வாழத் தொடங்கியதிலிருந்து குடும்பமும் சமுதாயமும் நாகரிக வளர்ச்சி பெறத் தொடங்கியது. உலகியலை உணரத் தொடங்கியதிலிருந்து உலகநீதியைப் பின்பற்றி வாழப் பழகிக் கொண்டனர். மெய்ப்பொருள் காணும் அறிவையும் வளர்த்துக் கொண்டனர். வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்துக் கொண்டனர். நாடாளும் மன்னர்கள் மட்டுமல்ல மக்களும் இதனைப் பின்பற்றி வாழத்துவங்கினர். இத்தகைய, மன்னர்கள் மற்றும் மக்களின் நெறிப்பட்ட வாழ்க்கையினைச் சுவைப்படக் கூறும் நூலாக முத்தொள்ளாயிரம் விளங்குகின்றது.

**முத்தொள்ளாயிரம்**

சேர, சோழ, பாண்டியர்களின் நாடும், நலமிக்க வாழ்வும், பெண்களின் காதலுணர்வும் இந்நூலில் சுவைப்படக் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு மன்னருக்கும் 900 பாடல்களாக மொத்தம் 27,000 பாடல்கள் இதிலுள்ளன. ஆனால் நமக்கு தற்பொழுது கிடைக்கப்பெறுபவை சேரன் - 23, சோழன் - 29, பாண்டியன் - 57, கடவுள் வாழ்த்து - 1 ஆக 110 பாடல்களேயாகும். மகளிர் காதலே இதில் மிகுதியாகப் பாடப்பட்டுள்ளன. இப்பாடல்கள் சந்த நயமும், கருத்தாழமும் மிக்கதாய் விளங்குகின்றன. ஆசிரியர் பெயரும் ஊரும் அறியப்படவில்லை எனினும் நெடுங்காலமாக நின்று நிலைக்கும் சிறப்புடன் திகழ்கின்றது. பாடல்களின் நிலைத்தத் தன்மையே ஆசிரியருக்குப் புகழ் சேர்க்கின்றது.

**சேர நாட்டு மக்களின் மகிழ்வான வாழ்க்கை**

ஒரு நாட்டு மக்களின் மகிழ்வுக்குப் பெரிதும் காரணமாக அமைவது அந்நாட்டு மன்னனின் ஆட்சி முறையே ஆகும்.

**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்** [1]

என்பர். மக்களின் நலன்களைக் கருதாத அரசை, மக்களுக்கு இன்னல் விளைவிக்கின்ற அரசை மக்கள் வெறுக்கின்றனர். நல்லாட்சி புரிந்து குடிகளை மகிழ்வுடன் வாழ வைப்பவனாக சேர மன்னன் திகழ்வதாக முத்தொள்ளாயிரப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இதனால் மக்கள் நிறைவாகவும் அருள் உள்ளம் கொண்டவர்களாகவும் விளங்குகின்றனர்.

**நீரும் நிழலும் போல்**
**நீண்ட அருளுடைய**
**ஊரிரே** **(முத்,ப.23)**

நீரும் நிழலும் மனதிற்கு இன்பத்தையும் உடலுக்குப் புத்துணர்ச்சியும் அளிக்கவல்லது. எனவே தான் அதனைப் போன்ற அருளாளர்கள் நிறைந்த ஊர் என்று புகழப்படுகின்றது.

வஞ்சி மாநகரைத் தலைநகரமாகக் கொண்ட சேர நாட்டில் படைத்தலைவர்கள் குடித்துவிட்டு கள்பானையின் மேலிருந்து நுரையை வழித்து எறிய அதில் யானைகள் நடந்து செல்வதால் சேறாகிக் காணப்பட்டது. ஒருவருக்கொருவர் கள்ளைப் பரிமாறிக் கொண்டு மகிழ்வுடன் வாழ்ந்தனர். சேரநாடு நீர்வளமிக்க பூஞ்சோலைகள் நிறைந்ததாகவும் காணப்பட்டது என்பதனை

**களிகள் களிகட்கு**
**நீட்டத் தம்கையால்**
**கனிகள் விதிர்ந்திட்ட**
**வெம்கள்-துளி கலந்து**
**ஓங்கு எழில் யானை**
**மிதிப்பச் சேறாயிற்றே**
**பூம்புனல் வஞ்சி அகம்** **(முத்,ப.25)**

என்ற பாடலால் விளக்கிச் செல்கின்றார். நிலவளமும், நீர்வளமும் மிக்க நாட்டில் மக்கள் மனமகிழ்வோடும் உடல் நலத்தில் சிறந்தும் வாழ்வது உண்மையே. மகிழ்வான வாழ்க்கையே